பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 10 | சனிக்கிழமை | 24.01.2026 | அதிர்வு 177 |
|---|---|---|---|---|---|

## மாகாண சபைத் தேர்தலை அநுர அரசாங்கம் நடத்தாது!

### இப்படி ராஜித கூறுகின்றார்



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு 07

# கிவுல் ஓயாத் திட்டம்; இரகசிய நகர்வு ஏன்?

## சத்தியலிங்கம் பாய்ச்சல் ரவிகரனும் கடும் எதிர்ப்பு



2011 ஆம் ஆண்டு கிவுல் ஓயாத் திட்டம் தயாரித்ததிலிருந்து இன்று வரை வெளிப்படைத்தன்மை இல்லாமல் மிக இரகசியமாகவே அனைத்து ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இந்தப் போக்கு ஏன் என்று கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத் தொகுதியில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் சீற்றத்துடன் கேள்வி எழுப்பினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனும் இந்தத் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். 06

# நம்பிக்கையில்லாப் பிரேரணை எங்கே?

## சுவிஸிலிருந்து நாடு திரும்பிய கையோடு பிரதமர் கேள்வி



"எனக்கு எதிராக முன்வைக்கப்படும் எனக் கூறப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை எங்கே? அதை எதிரணி மீளப்பெற்றுவிட்டதா?"

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் நேற்று பிற்பகல் உரையாற்றும்போது கேள்வி எழுப்பினார்.

"எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வரும் என்றுதானே சுவிஸில் இருந்து நான் இன்று (நேற்று) அவசரமாக வந்தேன். அந்தப் பிரேரணை எங்கே?" – என்றும் அவர் சிரித்தபடியே வினா தொடுத்தார்.

சுவிட்சர்லாந்தில் இருந்து நேற்று பிற்பகல் நாடு திரும்பிய கையோடு நாடாளுமன்றம் வந்தார் பிரதமர்.

சபையில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டு, எதிரணிக்கு உரிய பதிலடி கொடுத்தார்.




இலங்கை அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவர் நியமிக்கப்பட்டு விட்டார்கள். பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்களுக்குள் இணங்கி இந்த மூவரின் பெயர்களை பரிந்துரைத்தமையால் அவர்கள் அந்த கவுன்ஸிலின் உறுப்பினர்களாகி உள்ளனர்.

அந்த மூவரில் ஒருவர் இலங்கை சிவில் நிர்வாக சேவையில் மதிப்புக்குரியவராக விளங்கிய ஒஸ்ரின் பெர்னான்டோ.

அரசாங்க அதிபராக பணியாற்றியவர். பின்னர் அமைச்சுக்களின் செயலாளராகவும், ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இந்தியாவுக்கான தூதுவராகவும், கிழக்கு மாகாண ஆளுநராகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயலாளராகவும் கடமையாற்றி இருக்கிறார் அவர்.

பாதுகாப்புச் செயலாளராக அவர் கடமையாற்றிய காலம் மிக முக்கியமான ஒன்று. அதனால் இன்று அவர் பற்றிய ஒரு சிறு குறிப்பைத் 06

# தமிழ் மக்களுக்கு தமது பகுதியை தாமே ஆளும் உரிமை வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் ராஜித இடித்துரைப்பு



"மஹிந்த ஆட்சியின்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாக்கப் போராடியவன் நான். எனவே, அதிகாரப் பகிர்வு என்பது மிகவும் அவசியம். தமது பகுதியை தாமே ஆளக்கூடிய உரிமை தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு இடித்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போர் முடிவடைந்த கையோடு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தேன்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாக்க அவரது அரசில் இருந்தே போராடினேன்.

13 இல் கைவைத்தால் அமைச்சரவையில் இருந்து வெளியேறுவேன் எனவும் அறிவித்திருந்தேன்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பதை விட, தமிழ் மக்களுக்குத் தமது பகுதிகளை ஆள்வதற்குரிய அதிகாரம் வேண்டும். இந்த நோக்கில்தானே மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது.

நல்லாட்சியின்போது தீர்வைக் காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டது. எனினும், எமக்கு போதிய பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை.

சமஷ்டி ஒரு பக்கம் இருக்கட்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அதனை ஏன் அமுல்படுத்த முடியாமல் உள்ளது?" – என்றும் ராஜித கேள்வி எழுப்பினார்.

# செல்வச்சந்நிதி ஆலய மடத்தில் தங்கியிருந்து யாசகம் செய்து வந்த வயோதிபர் சடலமாக மீட்பு



**(வடமராட்சி நிருபர்)**

யாழ். வடமராட்சி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் உள்ள மடத்தில் தங்கியிருந்து யாசகம் செய்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு, பெரியபோரதீவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மீட்கப்பட்ட சடலம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரின் பிரசன்னத்துடன் மரண விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு உறவினரின் வருகைக்காக மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

# கிவுல் ஓயாத் திட்டம் என்ற பெயரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்!

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



அநுர அரசின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள கிவுல் ஓயாத் திட்டம் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் செயன்முறை கொண்டது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஏற்றுக்கொள்ளவோ – சம்மதிக்க முடியாத ஒரு விடயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அவர்களது மனவிருப்பை வெளிப்படுத்தும் உரிமையை அவர்களுக்கு அவர்களது கட்சி வழங்குமாயின் இந்தத் திட்டத்தை அவர்களும் எதிர்க்கவே செய்வார்கள் என நம்புகின்றேன்.

அதுதான் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள கிவுல் ஓயாத் திட்டமாகும். இது ராஜபக்ஷக்களால் தொடங்கப்பட்டது. ராஜபக்ஷக்கள் யார் என்பதைப் பிரதமரும் அறிவார். அவர்களை, இலங்கை இதுவரை கண்டிராத மிகக் கடுமையான இனவெறியர்களாக தமிழர்களாகிய நாங்கள் கருதுகின்றோம்.

போருக்குப் பின் 2013 ஆம் ஆண்டில், இந்தக்கிவுல்ஓயாத்திட்டம்முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 6 ஆயிரம் சிங்களக் குடும்பங்களைச் குடியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டது. சுமார் 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் குடும்பங்கள் ஏற்கனவே அந்த பகுதிகளில் குடியேற்றப்பட்டிருந்தன. 1984 ஆம் ஆண்டு முல்லைத்தீவு கிழக்கு மற்றும் வவுனியா வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த – பல நூற்றாண்டுகளாக அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக விரட்டப்பட்டனர். அவர்கள் இடம்பெயர்ந்தனர்.

அவர்கள் மீளக்குடியவர்வதற்கு முன்னரே தனித்தனியான குடியேற்றத் திட்டங்கள் நடந்தன. இந்த விடயங்கள் நீண்டகாலமாக நாங்கள் அவ்வப்போது எழுப்பி வரும் பிரச்சினையாகவும் உள்ளது.

போரின் முடிவில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது பூர்வீக இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாதவாறு, வனத்துறையினர் அவற்றையெல்லாம் காடுகள் என்று எல்லைப்படுத்தினர். அத்துடன் அந்த மாவட்டத்தைச் சேராதவர்களை கொண்டுவந்து இடங்களை ஆக்கிரமித்தனர். இப்போதும் இது ஒரு பெரிய பிரச்சினையாகவே உள்ளது.

வடக்கு மாகாணத்துக்குக் கொண்டுவரப்படும் இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இதுபோன்ற சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதே இந்தத் திட்டத்தின் அதிகாரபூர்வ நிலைப்பாடாகும். நடக்கவிருக்கும் குடியேற்றங்கள் அனைத்தும் சிங்கள குடியேற்றங்களாகும். இது போன்ற குடியேற்றங்களை மேற்கொள்வது உண்மையில் அரசமைப்பை மீறுவதாகும்.

நீங்கள் ராஜபக்ஷக்களை இனவெறி கொண்டவர்கள் என்று அழைக்கிறீர்கள், ஆனால் நீங்களும் அதையேதான் செய்கிறீர்கள். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த 7 பில்லியன் ரூபாகளை ராஜபக்ஷ, ஒதுக்கினார், மேலும் 2 பில்லியன்களால் நீங்கள் இந்தத் திட்டத்தை அதிகரித்துள்ளீர்கள்.

இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது அப்பட்டமான இனவெறி இல்லையா? இதன் மூலம் நீங்கள் எங்களுக்குச் சொல்லவரும் செய்தி என்ன?

நாங்கள் தனியார் நிலத்தில் கட்டப்பட்ட தையிட்டி விகாரை கட்டுமானத்தை எதிர்த்துப் போராடும்போது அதனை ஜனாதிபதி இனவெறி என்று கூறுகின்றார். நான் ஜனாதிபதிக்குச் சவால் விடுகின்றேன். அது தனியார் நிலத்தை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ளது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்குரிய நிலம் ஏற்கனவே இருக்கும்போது, அங்கு அந்த விகாரை கட்டப்படவில்லை. மாறாகச் தனியாருக்குச் சொந்தமான நிலத்தையே எடுத்துக் கொண்டனர்.

தனியாருக்கு சொந்தமான நிலங்கள் சட்டவிரோதமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கும்போது, ஜனாதிபதி இனவெறி என்று கூறுகின்றார். இதன்மூலம் நீங்கள் எங்களுக்குச் சொல்லும் செய்தி என்ன?

நாங்கள் ஆக்கபூர்வமாக இருக்க முயற்சிக்கும்போது நீங்கள் எங்களை விரக்தியடையச் செய்கிறீர்கள். நீங்கள் நியாயமற்ற முறையில் குறிவைக்கப்படும் போது, நாங்கள் அதற்குத் துணை போகவில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

நாங்கள் போராட்டம் நடத்தும் குடும்பங்களையும் அந்த மக்களையும் ஆதரிக்கின்றோம்,

உங்களிடமும் எந்த மாற்றமும் இல்லை. இந்த அரசு மற்ற அரசுகளிலிருந்து வேறுபட்டால், அரசு வடக்கு, கிழக்கு மக்களை நடத்தும் விதத்தில் ஒரு முறையான மாற்றம் இருக்க வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த காலங்களில் முந்தைய அரசாங்கங்கள் செய்த அதே காரியங்களை நீங்கள் செய்துகொண்டு அவர்கள் இனவெறி பிடித்தவர்கள் என்றும் நீங்கள் இனவெறி பிடித்தவர்கள் அல்ல என்றும் சொல்ல முடியாது.

எனவே நான் இந்த அரசிடமும், பிரதமரிடமும், இதில் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டம் நிறைவேறினால், உங்கள் அரசிடம் மக்கள் எதிர்பார்த்த இந்தக் கடைசி வாய்ப்பும் நழுவிவிடும்." – என்றார்.

# சுகாதார நடைமுறைகளினை மீறியவர்களிற்கு எச்சரிக்கையுடன், 440,000 ரூபா தண்டப்பணம்

வல்வெட்டித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட உதயசூரியன் கடற்கரையில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான பட்டத்திருவிழாவின் போது சுகாதார நடைமுறைகளான மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை, திண்மக்கழிவுகளை திறந்த வெளியில் அப்புறப்படுத்த காரணமாக அமைந்தமை, அனுமதிக்கப்பட்ட உணவுத்தர கொள்கலன்களை உணவுப்பொதியிடலுக்கு பயன்படுத்தாது பிளாஸ்ரிக் ரக கொள்கலன்களை பயன்படுத்தியமை, முகச்சவரம் மற்றும் தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவினை கையாண்டமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஐஸ்கிறீம் வாகனங்கள், பஞ்சு மிட்டாய் உற்பத்தி, காரம் சுண்டல் வாகனங்கள், பானிப்பூரி விற்பனை நிலையங்கள் உட்பட 24 உணவு கையாளும் நிலையங்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஸால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்று விசாரணையிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 19 உணவு கையாளும் விற்பனைநிலையங்களின்உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் மொத்தமாக 4,40,000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், எச்சரிக்கையும் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தீவிரமான அரசியலில் இனி ரணில் இல்லை!

## அவரே நேற்று அறிவிப்பு



தீவிரமான அரசியலில் இனிமேல் தாம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுக் காலை கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடங்களின்மகாநாயக்கர்களைவணங்கிஅவர்களின் ஆசிகளை அவர் பெற்றார்.

இந்த விஜயத்தின் போது, அவர் மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய திப்போட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரைச் சந்தித்தார். பின்னர் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்கர் அதி வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரைச் சந்தித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது, நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து மகாநாயக்க தேரர்களுடன் விக்கிரமசிங்க கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கலந்துரையாடல்களுக்குப் பிறகு, அரசியல் விடயங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி கேட்க முயன்றபோது, அவர்களின் கேள்விகளுக்குச் சுருக்கமாகப் பதிலளித்து, தான் இனி தீவிர அரசியலில் ஈடுபடவில்லை என்று கூறினார் ரணில் விக்கிரமசிங்க.

# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிய கோர விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!



இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கேகாலை – அவிசாவளை வீதியின் மத்தமகொட, பலோவிட்ட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கேகாலைதிசையில்இருந்துபயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், அவிசாவளை திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது இருவர் படுகாயமடைந்து கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொட்டியாகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

அவர்வெளிநாடுசெல்வதற்குத்தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதற்காகச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



© Navesh Chitrakar/REUTERS

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விசேட கொடுப்பனவு

## புதிய சுற்றறிக்கை வெளியீடு

நாட்டில் நிலவிய மோசமான கால நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் புதிய நிதியுதவித் திட்டங்களை அறிவித்துள்ளது.

குறிப்பாக, செயலிழந்து போயுள்ள சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஒரு தடவை மட்டும் வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகள் குறித்த விபரங்களை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வணிகங்களை மீண்டும் தொடங்குவதற்குத் தகுதியான நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக, ஒரு முறை மட்டும் வழங்கப்படும் கொடுப்பனவுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.


200,000 ரூபா கொடுப்பனவு, கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட, சிறு மற்றும் குறு வணிகங்கள், பிரதேச செயலகங்களில் வணிகங்களாகப் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட, சிறு மற்றும் குறு வணிகங்கள், 50,000 ரூபா கொடுப்பனவு, பதிவு செய்யப்படாத, ஆனால் நிரந்தரக் கட்டிடங்களில் நடத்தப்படும் வர்த்தக நிலையங்கள், பதிவு செய்யப்படாத உற்பத்தித் தொழில்கள் மற்றும் பசுமை இல்லங்கள், 25,000 ரூபா கொடுப்பனவு, நடைபாதை வியாபாரிகள் மற்றும் நடமாடும் வியாபாரிகள் உள்ளிட்ட தற்காலிக வணிக நடவடிக்கைகள் என்பன இவற்றில் உள்ளடங்கும், எனினும் இந்த கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகளையும் அமைச்சு வெளியிட்டுள்ளது, ஒரு வணிக அலகிற்கு ஒரு கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படும், ஒரு பயனாளி ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் (உதாரணமாக 50,000 மற்றும் 25,000 பிரிவுகள்) தகுதி பெற்றாலும், அவருக்கு ஏதேனும் ஒரு பிரிவின் கீழ் மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான நிதியொதுக்கீடு பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள 103 எனும் செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்படும்.

தகுதியான பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும அறிவித்துள்ளார்.

நிதி அமைச்சினால் 2026 ஜனவரி 22 அன்று வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கையானது, ஏற்கனவே 2025 டிசம்பர் 05 அன்று வெளியிடப்பட்ட அடிப்படைச் சுற்றறிக்கையின் ஒரு நீடிப்பாகும்.

பாதிக்கப்பட்ட வணிக உரிமையாளர்கள் மேலதிக விபரங்களுக்குத் தமது பிரதேச செயலகங்களை அணுக முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026-01-22

**අයවැය චක්‍රලේඛ අංක 08/2025(iii)**

සියලුම අමාත්‍යාංශ ලේකම්වරුන්
පළාත් සභා ප්‍රධාන ලේකම්වරුන්
දෙපාර්තමේන්තු ප්‍රධානීන්
දිස්ත්‍රික් ලේකම්/ දිසාපතිවරුන් හා ප්‍රාදේශීය ලේකම්වරුන්

**ආපදාවෙන් බලපෑමට ලක්වූවන් සවිබල ගැන්වීමේ වැඩසටහන**

අයහපත් කාලගුණික තත්ත්වය නිසා පැන නැඟුණු හදිසි ආපදා තත්ත්වය හේතුවෙන් බලපෑමට ලක්ව බිඳ වැටී ඇති ජන ජීවිතය යථා තත්ත්වයට පත් කිරීම සඳහා, 2025-12-05 දිනැති අයවැය චක්‍රලේඛ අංක 08/2025 සහ ඊට අදාලව නිකුත් කරන ලද සංශෝධිත චක්‍රලේඛ මඟින් යෝජිත සවිබල ගැන්වීමේ වැඩසටහන තුලින් ආපදාවෙන් බලපෑමට ලක්වූ ජනතාවගේ ජීවන තත්ත්වය වඩා ඵලදායී අයුරින් වැඩිදියුණු කිරීම සඳහා, ආපදාවෙන් බලපෑමට ලක්ව ඇණහිට ඇති ව්‍යාපාර වෙත තවදුරටත් පුළුල් සහන සැලසීමේ අරමුණින් මෙම චක්‍රලේඛය නිකුත් කරනු ලැබේ.

02. ඒ අනුව, අංක 08/2025 අයවැය චක්‍රලේඛයෙහි වගුවේ අනු අංක 8 හි සඳහන් දීමනා ලබාදීම වඩාත් කාර්යක්ෂමව හා ඵලදායීව ක්‍රියාත්මක කිරීමට පහත පරිදි පැහැදිලි කිරීම් හා සංශෝධන ඇතුළත් කරනු ලැබේ.

| අනු අංකය | | සහනය | දීමනාව |
|---|---|---|---|
| 8 | | ආපදාවෙන් බලපෑමට ලක්ව ඇණහිට ඇති ව්‍යාපාර නැවත ආරම්භ කිරීමට සුදුසු තත්ත්වයට පත් කිරීම සඳහා එක්වරක් පමණක් ගෙවනු ලබන දීමනාව | |
| | 8.1 | කර්මාන්ත අමාත්‍යාංශයේ ලියාපදිංචි තනි, සුළු හා ක්ෂුද්‍ර ව්‍යාපාර සඳහා | ඒකකයකට රු. 200,000/- |
| | 8.2 | ව්‍යාපාරයක් ලෙස ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ ලියාපදිංචි තනි, සුළු හා ක්ෂුද්‍ර ව්‍යාපාර සඳහා | ඒකකයකට රු. 200,000/- |
| | 8.3 | ලියාපදිංචි නොවූ ගෘහස්ථව ස්ථිර ගොඩනැගිලිවල පවත්වාගෙන යන වෙළඳ ව්‍යාපාර සඳහා | ඒකකයකට රු. 50,000/- |
| | 8.4 | ලියාපදිංචි නොවූ නිෂ්පාදන කර්මාන්ත හා හරිතාගාර යනාදිය සඳහා | ඒකකයකට රු. 50,000/- |
| | 8.5 | පදික සහ ජංගම ඇතුළු තාවකාලිකව සිදු කරන වෙළඳාම් සඳහා | ඒකකයකට රු. 25,000/- |

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தர விரும்புகிறேன்.

2001 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று பிரதமரானார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு கட்சியையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவருக்கு எதிரான தரப்பில் உள்ள பிறிதொரு கட்சியில் இருந்தும் அதிகாரத்துக்கு வந்த நிலையில், எதிரும் புதிருமான நெருக்கடி நிலைமை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நிலவக்கூடிய சூழல் அப்போது இருந்தது.

அந்தச் சமயத்தில்தான் 2001 டிசம்பரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஒஸ்ரின் பெர்னான்டோ நியமிக்கப்பட்டார்.

ரணிலின் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுக்கள் நடைபெற்ற காலம் இதுதான். அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாகி நடைமுறைக்கு வந்த காலமும் இதுதான். ஜனாதிபதி ஒருபுறமும், பிரதமர் மறுபுறமும் என்ற இரண்டும் கெட்டான் நிலைக்கு நடுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி என்பது கத்தியில் நடப்பது போல இருந்திருக்கும் என்பதை வாசகர்கள் இப்போதும் உணர்ந்து கொள்ள முடியும்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் இருந்தது. இருக்கின்றது. அப்போதும் அது ஜனாதிபதி சந்திரிகாவிடம்தான் முழுமையாக இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் மற்றும் சமரசத் திட்டங்களை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தார். பிரதானமான பாதுகாப்பு விடயங்களில் இந்த இருவருக்கு நடுவிலும் சமன் செய்பவராக மிக முக்கிய பொறுப்பு ஒஸ்ரின் பெர்னான்டோவிடம் இருந்தது.

திடுதிப்பென 2002 ஆரம்பத்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு அறிவிக்கப்பட்டது. வவுனியா செயலத்தில் வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்பமிட்டார். அந்த நிகழ்வின் போது நானும் அருகில் இருந்தேன். அதே நாளில் வன்னியில் புலிகளின் அலுவலகம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். யுத்த நிறுத்த உடன்பாடு உடனடியாக நடைமுறைக்கு வந்தது.

ஆனால், அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி சில தினங்களுக்கு பின்னர்தான் அந்த ஒப்பந்தத்தில் என்ன விடயங்கள் இருந்தன என்பது நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியும் முப்படைகளின் தளகர்த்தருமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு தெரியவந்தது.

நாட்டின் ஜனாதிபதிக்கே தெரியாமல் அரசியல் குள்ளநரியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளோடு செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி ஓரிரு வருடம் வரை நீடித்தது என்பதை மறுக்க முடியாது.

ஜனாதிபதிக்கே தெரியாமல் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகளோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து, அதை நகர்த்துவதற்கு இருவருக்கும் இடையில் வெளியில் தெரியாத மைய விசையாக இடையில் செயல்பட்டவர் இந்த ஒஸ்ரின் பெர்னான்டோ.

அந்தச் சமயத்தில் நோர்ட்டிக் நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்துச் செயற்படுத்துவதில் இலங்கை அரசுப் பக்கத்தில் பம்பரமாகச் சுழன்று செயலாற்றியவர் ஒஸ்ரின் பெர்னான்டோ.

ரணில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான உத்தியோகபூர்வ பேச்சுக்கள் சர்வதேச நாடுகளில் ஆறு இடங்களில் இடம்பெற்றன. அவை எல்லாவற்றின் போதும் அங்கங்கு நான் பிரசன்னமாகி இருந்து பேச்சுகள் பற்றிய செய்திகள் மற்றும் உள்ளாந்தரங்களை வெளிக் கொணர்ந்து, தமிழுலகுக்குத் தந்து கொண்டிருந்தேன். இரு தரப்புகளின் பிரதிநிதிகளுடனும் சரளமாகப் பழகும் நடுநிலையாளன் என்ற மரியாதையைக் கூட ஓரளவுக்கு சம்பாதித்துக் கொண்டிருந்தேன்.

அந்தப் பேச்சுகளில் ஒன்றில், என் நினைவு சரி என்றால் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சில், பங்குபற்றுவதற்காக ஒஸ்ரின் பெர்னான்டோ அங்கு வந்திருந்தார். அவரோடு நீண்ட நேரம் தனித்திருந்து இந்த சமாதான முயற்சிகள் குறித்து அச்சமயம் நான் உரையாடி இருக்கிறேன். அப்போதுதான் ஓர் அரச உயரதிகாரி என்பதற்கு அப்பால் தமிழர்களுக்கு நீதி, நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு கரிசனையாக இருந்தார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணிலின் அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் இதோ குழம்பப் போகின்றன என்ற இக்கட்டு நிலையை எட்டும் போது ஒரு பக்கத்தில் ஒஸ்ரின் பெர்னான்டோ போன்றவர்களும் மறுபக்கத்தில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் போன்றவர்களும் இறுதி நேர திருப்பங்களை ஏற்படுத்தி, பேச்சை முறிய விடாமல் ஆறாவது சுற்று வரை இழுத்துச் சென்றார்கள் என்பதை நான் நேரடியாக அறிவேன்.

பாதுகாப்புச் செயலாளராக இருந்த ஒஸ்ரின் பெர்னான்டோ 2003 இறுதியில் அந்தப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார் அல்லது விலகினார். அதன் பின்னர் ரணில அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் முற்றி பேச்சுக்கள் மிக நெருக்கடியான கட்டத்தை அடைந்தன என்ற நினைவு எனக்கு உண்டு. புலிகளுடனான பிரதமர் ரணிலின் சமரச முயற்சிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவை இணங்கிப் போக நெறிப்படுத்தும் விவேகமுள்ள – ஒஸ்ரின் பெர்னான்டோ போன்ற – மைய விசையும் இல்லாமல் போனது.

அத்தோடு ரணிலின் அரசை சந்திரிகா கலைத்தார். அந்த சமரச முயற்சி முடிவுக்கு வந்தது.

தமிழர் தரப்போடு சமரசம் கண்டு, ஓர் இணக்கமான நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற உளப்பூர்வமாக முயற்சித்த தென்னிலங்கை அதிகார வர்க்கத்தில் ஒஸ்ரின் பெர்னான்டோ ஒருவர் என்பது என் அனுபவக் கணிப்பீடு.

இப்போது அவருக்கு வயது 83. இந்தச் சமயத்திலும் அரசமைப்பு கவுன்ஸில் மூலம் அவர் காத்திரமாகப் பணியாற்றுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

---

## கிவுல் ஓயாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பான விசேட கூட்டமொன்று நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் துறைசார் அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஊடகங்களுக்கு விசேட செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

"கிவுல் ஓயா நீர்ப்பாசன திட்டம் தொடர்பான விசேட கூட்டமொன்று இன்று (நேற்று) நாடாளுமன்ற வளாகத்தில் துறைசார் அமைச்சர்கே.டி.லால்காந்ததலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் துறைசார் அமைச்சின் பிரதி அமைச்சர்கள், கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மகாவலி – எல் வலய விவசாய அமைப்புகளின் பிரதிநிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வாறான ஒருகூட்டம் நடைபெற இருப்பதாகவும் அதில் கலந்துகொள்ளுமாறும் ஒருசில தினங்களுக்கு முன் பிறிதொரு நிகழ்வில் தெரிவித்த அமைச்சர் கே.டி.லால்காந்த அதற்கான அழைப்பு எங்களுக்கு அனுப்பப்படும் என அப்போது தெரிவித்தார்.

ஆனால் இன்றைய (நேற்றைய) கூட்டம் தொடர்பாக எமக்கு அறிவிக்கப்படாத நிலையில் நானும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களும் கலந்து கொண்டோம்.

அமைச்சர் லால்காந்த இதன்போது எமது கருத்தை அறிய ஆவலாக உள்ளார் எனத் தெரிவித்தார்.

மகாவலி – எல் வலய குடியேற்றம் தொடர்பான விடயங்களிலும் அங்கு இப்போது நடைபெறும் கிவுல் ஓயா நீர்ப்பாசனதிட்டம்தொடர்பிலும்கசப்பானகடந்த கால அனுபவங்களும் கரிசனையும் எமக்கு உள்ளன என்பதை அச்சபைக்கு தெரியப்படுத்தினோம்.

2011ஆம் ஆண்டு கிவுல் ஓயாத் திட்டம் தயாரித்ததிலிருந்து இன்றுவரை வெளிப்படைத்தன்மை இல்லாமல் மிக இரகசியமாகவே அனைத்து ஏற்பாடுகளும் நடைபெறுவதாக சபைக்கு சுட்டிக் காட்டினோம்.

இவ்வாறே செட்டிகுளத்தில் நடைபெறும் கீழ்மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டம்இரகசியமாகச்சம்பந்தப்பட்டமாவட்ட மக்களுக்குத் தெரியாமல், அத்திட்டத்துக்கான காரியாலயத்தை இரகசியமாக அநுராதபுரத்தில் அமைத்து வேலைகளை முன்னெடுத்தமை தொடர்பிலும் தெரியப்படுத்தினோம்.

இறுதியாக நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான திட்ட முன்மொழிவை எமது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து பொருத்தமான அனுமதியை பெறவேண்டும் என்று நான் முன்மொழிந்திருந்தேன். அவ்வாறு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினேன்.

மகாவலி – எல் வலய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கிருந்த பூர்வீக குடிமக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு 1983இல் குடியேற்றம் செய்யப்பட்டாலும் இதுவரை மகாவலி நீர் அங்கு கொண்டுவரப்படவில்லை. கிவுல் ஓயாத் திட்ட முன்மொழிவில் மகாவலி நீரை கொண்டுவரும் சாத்தியக்கூறுகள் இல்லாததாலேயே மாற்றீடாக இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதாக இருப்பதையும் மேற்படி திட்ட நோக்கத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யும் இடத்தில் புதிய குடியேற்றவாசிகள் குடியமர்த்தப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டதையும் தெளிவுபடுத்துமாறு கோரினோம்.

எமது கருத்தைக் கேட்டறிந்த அமைச்சர் உட்பட்ட குழுவினர் பின்வரும் உறுதிமொழிகளை எமக்கு வழங்கினர்:–

* திட்டப் பிரதேசத்துடன் தொடர்பு

தொடர்ச்சி▼

## கிவுல் ஓயாத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

டைய அனைத்து மக்கள் பிரதிநிகளுட னும் பிரதேச மக்களுடனும் பெப்ரவரி மாத முற்பகுதியில் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நடைபெறும்.

* புதிய குடியேற்றவாசிகள் வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படமாட்டர்கள்.

சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரை யாடாது திட்டத்தைத் தயாரித்து நடை முறைப்படுத்தும் தறுவாயில் எமது தலை யீட்டையடுத்து தெளிவுபடுத்தல் செய்ய ஆயத்தமாகும் செயற்பாடு ஆபத்தானது, கண்டிக்கப்பட வேண்டியது.

மேற்படி திட்டத்தால் நாம் எதிர்கொள் ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் செயற்பாட்டில் அனைவரும் இணைந்து செயற்பட நடவடிக்கை எடுத்துள்ளோம். அனைவரையும் இந்தச் செயற்பாட்டில் இணைந்து பணியாற்ற முன்வருமாறு வேண்டுகின்றேன்." – என்று சத்தியலிங் கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### ரவிகரன் கருத்து

இது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

"தமிழ் மக்களுக்குப் பல்வேறு வழிக ளிலும் பாதகமாக இருக்கின்ற கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பான கலந்துரை யாடல் விவசாய அமைச்சர் கே.டி.லால்க ாந்த மற்றும் சபை முதல்வரும் அமைச்ச ருமான பிமல் ரத்நாயக்க ஆகியோரின் பிரசன்னத்துடன் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் தெளிவூட்டு கின்ற வகையிலும், திட்டம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்க ளைக் கேட்டறியும் கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது.

இந்த கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதகத் தன்மைகள் தொடர்பில் எடுத்துக்கூறி நானும், வைத்தியர் சத்தியலிங்கமும் இந்தத் திட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்தோம்.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட் டால் தமிழர்களது இனப்பரம்பல் கோலம் மற்றியமைக்கப்படுவதுடன், தமிழர்களது பூர்வீகத் தொல்லியல் சான்றுகளும் அழிக் கப்படும் என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

இது தவிர சுற்றுச்சூழல் பாதிப்பு நிலைகள் ஏற்படும் அபாய நிலைகள் இருப்பதையும் இதன்போது மிகத் தெளி வாகச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

### இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைக்கும் கிவுல் ஓயா

குறிப்பாக இந்தக் கிவுல் ஓயா நீர்த் தேக்கத் திட்டத்தைச் செயற்படுத்தினால் வவுனியா வடக்கில் இருக்கின்ற தமிழ் மக்களின் பூர்வீக இராமன்குளம், கொட் டோடைக்குளம், ஒயாமடுக்குளம், வெள் ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக் கல்மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறியநீர்ப்பாசனக்குளங்க ளும், அவற்றின் கீழான வயல்காணிக ளும், வெடிவைச்சகல்லு குளத்தின்கீழ் வரும் வயல்காணிகள் பகுதியளவி லும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச் சன்குளம், கூழாங்குளம் வயற்காணிக ளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மரு தோடைக் கிராமத்தின் ஒருபகுதி போன்ற தமிழ் மக்களின் பூர்வீகக் குளங்களும், வயல்நிலங்களும், கிராமங்களும் நீரேந் துப்பகுதிகளுக்குள் மூழ்கிப்போகும் என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

இவ்வாறாக தமிழ் மக்களை அவர்க ளுடைய பூர்வீக இடங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு, குடியேற்றப்பட்ட 6 ஆயிரம் பெரும்பான்மையினக் குடும்பங் களை வலுப்படுத்தி தமிழ் மக்களின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைக் கும் இவ்வாறான திட்டங்களை ஒருபோ தும் எம்மால் அனுமதிக்க முடியாது என்று எம்மால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### கருத்திலெடுக்கப்படாத சுற்றுச்சூழல்பாதிப்பு

இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்துக்காக வவுனியா பெரிய கட்டுக்குளம் பகுதியி லுள்ள பாரிய ஒதுக்கக் காடுகள் அழிக் கப்படவுள்ளன. அத்தோடு கொக்குத் தொடுவாயிலுள்ள கிரிபன்வெவ என்று பெயர் மாற்றப்பட்டுள்ள தமிழர்களின் பூர்வீக ஆமையன் குளத்துக்கு நீரை நகர்த்துகின்றபோது 2 ஆயிரத்து 500 ஹெக்டெயர் காடுகள் அழிந்துவிடும் என்று சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தத் திட்டத்தை அண்மித்த புதிய குடியேற்றங்களுக்காக 1,500 ஹெக்டெயர் அளவிலான வாழ் விடத்தை வனஜீவராசிகள் இழப்பதால் மனித – யானை மோதல்கள் மற்றும் ஏனைய வனஜீவராசிகளுக்கிடையி லான மோதல்கள் தீவிரமடையும் என்று வனஜீவராசிகள் திணைக்களம் கவலை தெரிவித்துள்ளதாக இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் மேம்படுத்தப் படவுள்ள விவசாய நிலங்களைப் பாதுகாப் பதற்காக மின்சார வேலிகள் அமைக் கப்பட்டால் காட்டுயானைகள் மற்றும் ஏனைய வனஜீவராசிகளின் நடமாட்டம் கேள்விக்குறியாகும். இதனால் வனஜீவ ராசிகளின் உயிரவாழ்வு தொடர்பான பிரச்சினை உருவாகும்.

காட்டு யானை உள்ளிட்ட வனஜீவரா சிகள் புதிய வழித்தடங்களை நாடி னால் மின்சார வேலிகளை மேலும் 50 கிலோமீற்றருக்கு அதிகரிக்கும் நிலை ஏற்படும் எனவும், எனவே அதற்கு மேல திக நிதி தேவைப்படும் எனவும் வன ஜீவராசிகள் திணைக்களம் கரிசனை வெளியிட்டுள்ளது.

எதிர்காலத்தில் ஒதுக்கக் காடுகளை அழிக்கும் நில மேலும் தீவிரமடைந்தால் நீண்டகாலத்தில் மழைவீழ்ச்சி குறை வடைவதற்கான நிலைமை ஏற்படலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த கிவுல் ஓயாத் திட்டப் பகுதியில் மொத்தம் 88 தாவர இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 2 தாவர இனங்கள் தேசிய அளவில் அச்சுறுத்த லுக்கு உள்ளானவையாகக் காணப்படு வதுடன், முக்கியமான 7 தாவர இனங் களும் அடையாளம் காணப்பட்டுள் ளன.

அதேவேளை, இந்தப் பகுதியில் 214 விலங்கு இனங்கள் பதிவு செய்யப்பட் டுள்ளன. அவற்றில் 14 விலங்கு இனங் கள்உள்ளூரைச்சேர்ந்தவையாகக்காணப் படுகின்றன. மேலும் இங்கு காணப்படும் 4 விலங்கு இனங்கள் உலக அளவில் ஆபத்துக்கு உள்ளானவையாகக் காணப் படுவதுடன், 8 விலங்கு இனங்கள் தேசிய அளவில் அழிந்து வருபவையாகவும் உள்ளன.

அதேவேளை பறவைகளில் புலம் பெயர்ந்த இனங்களும் இந்தப் பகுதி யில் அடையாளம் காணப்பட்டுள் ளன.

ஆகவே சுற்றுச்சூழல் பாதுகாப் புத் தொடர்பில் அவதானம் செலுத்தி கின்றபோது இந்தத் திட்டத்தின் நேர்மை மறையான முடிவுகளை விடவும் எதிர் மறையான தாக்கங்களே அதிகமாக இருக்கின்றன என்பதையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

### வன்னிக்கும் தமிழர்களுக்குமான வரலாற்றுத் தொடர்பு விழுங்கப்படும்

மேலும் கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தினால் நீரேந்துப் பகுதிக் குள் 47 தொல்லியல் இடங்கள் மூழ்கிப் போகும் அபாய நிலை ஏற்படும்.

தமிழர்களின் பூர்வீகத்தைப் பறைசாற் றும் வன்னி இராச்சியத்துடன் தொடர்பு டைய வரலாற்றுத் தொன்மங்களே இவ்வாறு கிவுல் ஓயாத் திட்டத்தில் மூழ்கிப் போகும் நிலையில் காணப்படுகின்றன என்பதும் இதன்போது சுட்டிக்காட்டப்பட் டது.

எனவே, தமிழர்களுக்கும் வன்னிக்கும் இடையிலான நீண்டகால வரலாற்றுத் தொடர்பை நீரில் மூழ்கச் செய்கின்ற இந் தத் திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற எமது கருத்துக்களை இதன்போது தெரிவித்திருந்தோம்.

இந்நிலையில்குறித்ததிட்டத்தால்பாதிப் புக்கள் எவையும் இடம்பெறாது என்று தெரிவித்த மகாவலி அதிகார சபையி னர், கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக வவுனியாவில் தெளிவூட்டல் கலந்துரை யாடல் ஒன்றை நடத்துவர் எனத் தெரிவித் தனர்." – என்றார்.

---

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எனத் தான் நம்பவில்லை என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித் தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசுக்கான மக்கள் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து வருகின்றது. எனவே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என நான் நம்பவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணையும் என நம்புகின்றேன். இதற்கு சஜித் பிரேம தாஸ இணங்காவிட்டால்கூட இரு தரப்பு இணைவு நிச்சயம் நடக்கும்.

இலங்கையில் தற்போதைய சூழ்நிலை யில் சவாலை ஏற்கக்கூடிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க மட்டுமே திகழ்கின் றார்." – என்றார். (மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்...)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இறுக்கமான சட்டம் அவசியம்

நாட்டில் சகல துறைகளிலும் மக்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய விதத்திலான பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில், சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று ஆளும் கட்சி பிரதம கொரடாவும் வெகுஜன ஊடக மற்றும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, ஆயுர்வேத உற்பத்திகள் மற்றும் சிகிச்சை முறைகள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் காணப்படும் போலியான விளம்பரங்கள் குறித்து ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தர்மபிரிய திஸாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்களை அரசு கொண்டு வந்தால் ஊடக சுதந்திரம் மீதான பாய்ச்சல் என்று அதை விமர்சித்து, அத்தகைய நடவடிக்கைகளை கண்மூடித்தனமாக எதிர்க்கும் ஒரு போக்கு தொடர்ந்து நீடிக்கின்றது.

கருத்து வெளியிடும் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றவற்றின் காவல் நாய்களாகத் தங்களை அர்த்தப்படுத்திக் கொள்ளும் ஊடகங்கள் தான் இதில் முன்னிலையில் நின்று பெரும் எதிர்ப்பையும் ஆரவாரத்தையும் காட்டுவார்கள்.

ஆனால் சமூக ஊடகங்கள் என்ற பெயரில் தங்களை வெளிப்படுத்தாமல், தங்களை அடையாளப்படுத்தாமல், புனைபெயர்களுக்குள்ளும் அநாமதேய அடையாளங்களுக்கும் தங்களை ஒளித்துக் கொண்டு பொது வாழ்வில் இருக்கின்ற தரப்புக்களை கண்மூடித்தனமாக - மிக மோசமாக - மிக கேவலமாக - பண்பு குறைந்து - விமர்சிக்கின்ற ஒரு நிலைமை எல்லை தாண்டிப் போய்க் கொண்டிருக்கின்றது. இதனால் பொது மற்றும் சமூக வாழ்வுக்கு வருவதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

கருத்து வெளியிடும் சுதந்திரமும் ஊடக சுதந்திரமும் மற்ற தரப்பின் நீதி, நியாயமான உரித்துக்களைக் கண்மூடித்தனமாக மீறுவதற்கு இடமளிக்க முடியாது. இடமளிக்கக் கூடாது. ஆனால் அதுதான் நாட்டில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது.

தங்களை வெளிப்படையாக அடையாளப்படுத்தாமல் ஒளிந்து இருந்து கொண்டு, சமூகத்தில் மதிப்பார்ந்த பிரஜைகளுக்கும், அமைப்புகளுக்கும், தரப்புகளுக்கும், தங்கள் எதிரிகளுக்கும் எதிராக பொறுப்புக் கூறல் கடப்பாடு இன்றி எதையும் கூறுகின்ற - அவமானத்தை ஏற்படுத்தும் விதத்தில் ஈனத்தனமான கதைகளைப் பரப்புகின்ற - தரப்புகளை பொறுப்புக் கூறலுக்கு கட்டாயப்படுத்துகின்ற சட்டம் மேலும் இறுக்கமாகக் கொண்டு வரப்பட வேண்டும். அது, முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இத்தகைய நடைமுறைகள் உள்ளன.

ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் சட்டக் கடப்பாடுகள் - கட்டுப்பாடுகள் - இலகுவாக்கி அவிழ்த்து விடப்பட்டு, நாட்டில் கேவலம் கெட்ட ஒரு நிலையை நோக்கி கருத்துச் சுதந்திரம் போவதற்கு இடமளிக்க முடியாது.

கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்று எப்போதும் அதிகம் அலட்டிக் கொள்ளும் தரப்புக்கள் இவ்வாறு எல்லை மீறும் போக்குகள் குறித்தும், அவற்றை கட்டுப்படுத்தும் மார்க்கங்கள் குறித்தும் அலட்டிக் கொள்வதில்லை. கவலைப்படுவதில்லை. ஆனால் அது சமூக அமைதிக்கும், மக்களின் கௌரவமான வாழ்வுக்கும், தனி மனித சீலத்துக்கும் பெரும் பங்கம் ஏற்படுத்தும் ஒரு பெரும் பாதகமாக மாறி வருவது அச்சத்துக்குரியதாகும்.

இந்த விடயத்தில் தேசிய சக்தி அரசு பொது விமர்சனங்களுக்கு அப்பால் நின்று கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.



# இந்துக் கல்லூரி கொழும்பின் 75 ஆவது ஆண்டு பவள விழா

இந்துக் கல்லூரி கொழும்பின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் “பவளப் பொங்கல் - 2026“ மற்றும் பவள விழா அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் 75 ஆண்டுகால கல்விப் பணியைக் கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, நேற்று வெள்ளிக்கிழமை காலை கல்லூரி மைதானத்தில் 75 பானைகளில் அனைத்து வகுப்புக்களையும் இணைத்து பொங்கல் பொங்கி ஆரம்பமானது. இந்த விசேட நிகழ்வு இந்துக் கல்லூரி கொழும்பின் அதிபர் இளையதம்பி இலங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொழும்பு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி கலந்துகொண்டு சிறப்பித்தார். கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைப்பேராசிரியர் கலாநிதி ச. முகுந்தன் பங்கேற்று சிறப்பான உரையை ஆற்றினார்.

இவர்களுடன் சிறப்பு விருந்தினர்களாக IDM நேஷன் கேம்பஸ் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன், மற்றும் சாமுவேல் அண்ட் கோ பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்குதாரர் திரு. சாமுவேல் சி. காந்த் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

1951ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான கல்லூரியின் 75 ஆண்டுகால வரலாற்றுப் பெருமையைப் பறைசாற்றும் வகையில் இந்த “பவளப் பொங்கல்“ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாரம்பரிய முறைப்படி பொங்கலிட்டு, கலை நிகழ்வுகளுடன் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் இவ்விழா அமைந்திருந்தது.

இந்துக் கல்லூரி கொழும்பின் முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்த இந்த அங்குரார்ப்பண நிகழ்வு, “தமிழர் திருநாளில் கலந்து சிறப்பிக்க அனைவரும் வாரீர்” என்ற அழைப்புடன் நிறைவடைந்தது.









# இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள மின்சார சபை மறுசீரமைப்பு

நாட்டின் எதிர்கால மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தேசிய அபிவிருத்தி இலக்குகளை எட்டவும் திட்டமிடப்பட்டுள்ள இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் நோயல் பிரியந்த, மின்சக்தி துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனைகளை நடத்திய பின்னரே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக, மின்சார சபையின் ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மறுசீரமைப்புத் திட்டத்தின் போது ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட நலன்புரி விவகாரங்கள் மற்றும் ஏனைய கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், சாத்தியமான அனைத்து விடயங்களுக்கும் உரிய தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக நிர்வாகத் தரப்பு தெரிவித்துள்ளது.

மின்சாரத் துறையின் அபிவிருத்தியானது நாட்டின் தேசிய முன்னுரிமை மிக்க விடயமாகும். இந்தச் சூழலில், மறுசீரமைப்புச் செயற்பாடுகளை முன்னோக்கிகொண்டு செல்வதற்கு ஊழியர்கள், நுகர்வோர் மற்றும் குறிப்பாக தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கும் என மின்சார சபை நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.











# மாங்குளம் பஸ் நிலையத்தை முழுமையான பயன்பாட்டுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்க!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய மையப் புள்ளியாகத் திகழும் மாங்குளம் பஸ் நிலையத்தை, முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மாங்குளம் பஸ் நிலைய அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால், தயாரிக்கப்பட்ட திட்ட வரைவு பற்றி ஆராயும் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

மாங்குளம் பஸ் நிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்கள் என்பன உரிய வகையில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனை மாற்றியமைத்து, அந்தப் பகுதியை முழு அளவில் இயக்குவதற்கான திட்ட வரைவு நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டு, இக்கலந்துரையாடலில் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன:-

பஸ் நிலையத்துக்கான போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான இணைப்பு வீதிகள் அமைத்தல். மாங்குளத்தை மையப்படுத்தி, முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூர் பஸ் சேவைகளை எதிர்காலத்தில் வினைத்திறனாக ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துதல்.

பஸ் நிலையத்துக்காகத் திட்டமிடப்படும் வீதி, மாங்குளம் ரயில் நிலையத்துக்குரிய காணி எல்லைக்குள் வருவ

தொடர்ச்சி▼





# மாங்குளம் பஸ் நிலையத்தை முழுமையான பயன்பாட்டுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்க!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை

தொடர்ச்சி▲

தால், ரயில்வே திணைக்களத்தின் அனுமதியை விரைவாகப் பெற்றுப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத்திட்டமுன்மொழிவைமுல்லைத் தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறுமாறும் ஆளுநர் இதன்போது பணிப்புரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், முல்லைத்தீவுமாவட்டச்செயலாளர், முல்லைத் தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், ரயில்வே திணைக்களப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்டப் பொறியியலாளர், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





# ‘Rebuilding Sri Lanka’ நிதியத்திற்கு 8.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதி

## 47 நாடுகள் உதவி

டிட்வா சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளின் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ‘Rebuilding Sri Lanka’ நிதியத்தின் தற்போதைய நிலை குறித்து நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும விளக்கமளித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமவின் தகவல்படி, இலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் இதுவரை வழங்கப்பட்டுள்ள நிதிப் பங்களிப்பு 8.5 பில்லியன் ரூபாவையும் கடந்துள்ளது.

சுனாமிக்கு பிந்தைய மீள்கட்டமைப்பு போன்றே, இந்தச் சூறாவளி அனர்த்தத்தின் பின்னரும் சர்வதேச நாடுகள் இலங்கைக்குப் பெரும் ஆதரவை வழங்கியுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து இதுவரை 9.49 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக நிதி கிடைத்துள்ளது.

இதில் அதிகூடிய நிதிப் பங்களிப்பை அமெரிக்கா வழங்கியுள்ளதுடன், அந்தத் தொகை ஒரு பில்லியன் ரூபாவையும் தாண்டியுள்ளது.

இலங்கைக்கு அதிகளவில் நிதியுதவி வழங்கிய நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவிற்கு அடுத்ததாக அவுஸ்திரேலியா, சீனா, இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பூட்டான், இத்தாலி, தென் கொரியா உள்ளிட்ட 47 நாடுகள் நிதி மற்றும் உதவிகளை வழங்கியுள்ளன.

நிதி உதவிகளுக்கு மேலதிகமாக, பெருமளவிலான நிவாரணப் பொருட்கள் இலங்கை சுங்கத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவ்வாறு கிடைத்துள்ள பொருட்களின் மொத்தப் பெறுமதி 2.3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.



இந்த நிதியானது மிகவும் வெளிப்படையான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளைக் கட்டியெழுப்புவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.





# வவுனியா பல்கலைக்கழகத்தில் வியாபார ஒத்துழைப்பு மையம்

## நேற்று அமைச்சர்களினால் ஆரம்பித்து வைப்பு

(கி.வசந்தன்)

நாட்டின் முதல் தொழில் நுட்ப சேவைகள் மற்றும் உதவி மையம் வவுனியா, பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேரத்ன மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹநதுன்நெத்தி ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

தொழில்முனைவு, புதுமை, ஆராய்ச்சி, வணிகமயமாக்கல், வணிக மேம்பாடு, தொழில்நுட்ப சேவைகள் மற்றும் உதவிகள் ஆகியவை இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் முனைவோருக்கு ஒத்துழைப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டு “வியாபாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற நிறுவனங்களை“ பல்கலைக்கழகங்களை மையமாக வைத்து ஆரம்பிப்பிக்கும் நோக்கோடு வவுனியா பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வு நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன், முன்னணி தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த அறிவியல், தொழில்நுட்ப கண்காட்சியும் அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு இளைஞர்களின் கண்டுபிடிப்புக்கள், கழகங்கள் மற்றும் அறிவியல் சங்கங்கள் நிறுவப்படும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களும் இக் கண்காட்சியில் பங்கேற்றனர்.

இதன்மூலம் வடமாகாணத்தில் முதன் முதலாக தரச்சான்றிதழ் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கு கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் கிரிசாந்த அபேயசேன, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஜெகதீஸ்வரன், எஸ். திலகநாதன் மற்றும் பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர் அ.அற்புதராஜா உட்பட அமைச்சின அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# கிளிநொச்சியில் வெடிக்காத நிலையில் இரண்டு ஷெல் குண்டுகள் நேற்று மீட்பு

**(மரியசீலன் திலைக்ஸ்)**

கிளிநொச்சி பரந்தன் உமையாள் புரம் கிராம சேவையாளர் பிரிவின் விளாவோடை பகுதியில் இரண்டு வெடிக்காத ஷெக் குண்டுகள் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

விளாவோடை பகுதியில் உள்ள நெல் வயல் சாலையின் அருகே, இரண்டு 60மிமீ வெடிக்காத குண்டுகள் இருப்பதை அப்பகுதி மக்கள் கண்டனர்.

பின்னர் அவர்கள் அத்ய் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குவருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் அந்த இடத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியமையுடன் இரு குண்டுகளையும் அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 21 மாவட்டங்களில் 42 ஆரோக்கிய மையங்கள் இன்று புதிதாகத் திறந்து வைக்கப்படுகின்றன

## ஆனால் வடக்கில் மட்டும் எதுவும் இல்லை




**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

நாட்டில் உள்ள மக்கள் உன்னதமான சுகாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் திட்டம் என்ற அடிப்படையில் நாடு முழுவதும் 1000 ஆரோக்கிய மையங்களை (Arogya Wellness Centers) நிறுவும் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக இரண்டாம் கட்டமாக, 21 மாவட்டங்களில் 42 மையங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப் படவுள்ளன.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் "ஆரோக்கியமான இலங்கை" எனும் புதிய திட்டத்தின் கீழ் இம்மையங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்த முன்னோடித் திட்டத்தின் முதற்கட்டமாக 2025 ஆம் ஆண்டு காலி (மாபலகம), இரத்தினபுரி (எத்ஒய), களுத்துறை (தல்பிட்டிய), கண்டி (பொலகொல்லவத்தை) மற்றும் மாத்தளை (குன்கந்த) ஆகிய பகுதிகளில் 5 ஆரோக்கிய மையங்கள் ஏற்கனவே நிறுவப் பட்டுள்ளன.

இவ்வாண்டிற்குள் நாடு முழுவதும் 250 புதிய ஆரோக்கிய மையங்களை நிறுவுவதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு வழங்கப்படவுள்ள 42 மையங்களின் மாவட்ட ரீதியான விவரம் பின்வருமாறு:

கொழும்பு - 3, குருநாகல் -3, களுத்துறை - கம்பஹா -2, கண்டி - 2, காலி - 2, மாத்தறை -2, ஹம்பாந்தோட்டை -2, மட்டக்களப்பு -2, புத்தளம் - 2, பதுளை - 2, மொனராகலை - 2, அநுராதபுரம் - 2, பொலன்னறுவை - 2, அம்பாறை - 2, கேகாலை - 2, நுவ ரெலியா -2, திருகோணமலை - 2, இரத்தினபுரி -1, கல்முனை - 1, மாத் தளை -1

களுத்துறை மாவட்டத்தின் கனன்வில மற்றும் ஹீனட்டியங்கல ஆகிய ஆரோக்கிய மையங்களை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திறந்து வைப்பதன் மூலம் இத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த ஒவ்வொரு மையத்திலும் ஒரு குடும்ப வைத்தியர், சமூக சுகாதார தாதி உட்பட எட்டுப் பேரைக் கொண்ட சுகாதாரக் குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மக்கள் இலகுவாக அணுகக்கூடிய இடங்களில் இம்மையங்கள் அமைக்கப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

சமூகப் பங்கேற்புடன் இயங்கவுள்ள இம்மையங்கள் ஊடாக, அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும், பொதுமக்களைச் சுகாதார ரீதியாக வலுப்படுத்துவதும் முக்கிய நோக்கங்களாகும்.

குறிப்பாக, தொற்றா நோய்களைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல், புற்றுநோய் பரிசோதனை, சிறு சத்திர சிகிச்சைகள், முதியோர் பராமரிப்பு, மறுவாழ்வுச் சேவைகள், ஆரம்ப கண் மற்றும் வாய் சுகாதாரப் பராமரிப்பு, மனநலச் சேவைகள் மற்றும் ஆலோசனை, போசாக்கு சேவைகள் மற்றும் ஆய்வகப் பரிசோதனைகள் உள்ளிட்ட பல ஆரம்ப சுகாதாரச் சேவைகள் இங்கு இலவசமாக வழங்கப்பட உள்ளமை சிறப்பம்சமாகும்.



# ஹல்தமுல்லவில் இரண்டு பஸ்கள் மோதிய விபத்தில் அறுவர் காயம்!

(பசறை: நடராஜா மலர்வேந்தன்)

பதுளை மாவட்டம் ஹல்தமுல்ல, கிரவணாகம பகுதியில் நேற்று மாலை தனியார் பஸ் ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு உரித்தான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், ஆறு பயணிகள் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக ஹல்துமுல்ல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

விபத்துக்குள்ளான இரண்டு பஸ்களும் பெரிதளவில் சேதமடைந்துள்ளன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹல்தமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# நாடாளுமன்ற பெண் ஊழியர்களுக்கு துன்புறுத்தல் விசாரணை அறிக்கையை மூடி மறைக்கப்படுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



நாடாளுமன்ற பெண் ஊழியர்கள் எதிர்கொண்ட பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை, நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மறைக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், ஊழியர் ஆலோசனைக் குழு இன்று கூடி இந்த விசாரணை அறிக்கை குறித்து விவாதிக்கவுள்ள போதிலும், இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்த அறிக்கை வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

“பாலியல் துன்புறுத்தல் தொடர்பான இந்த அறிக்கையை உறுப்பினர்கள் முறையாகப் படித்துப் பார்த்தால் மாத்திரமே, ஆலோசனைக் குழு கூட்டத்தில் இது குறித்து ஆக்கபூர்வமாக விவாதிக்க முடியும். ஆனால், இந்த அறிக்கை உறுப்பினர்களிடமிருந்து மறைக்கப்படுவது ஏன்?” என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெறும் போது, அந்த அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பெண் ஊழியர்கள் சிலர் உயர் அதிகாரிகளால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார் என கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்த நிலையில், அது தொடர்பான விசாரணை அறிக்கை தற்போது நாடாளுமன்றத்தில் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

# கோட்டாவுக்கு ஏற்பட்ட நிலை தற்போதைய அரசுக்கு ஏற்படும்

## சாணக்கியன் எம்.பி. எச்சரிக்கை



விவசாயம் தொடர்பில் புதிய நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட கோட்டாபய அரசுக்கு ஏற்பட்ட நிலை, கல்வி தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் இந்த அரசுக்கு ஏற்படும் நிலை உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் பாதையில் தற்போதைய அரசாங்கம் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குறிப்பிட்டார்.

அன்றைய அரசாங்கம் முன்னெடுத்த திட்டங்களை ஒத்ததாக தற்போதைய அரசாங்கமும் முன்னெடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் எவ்வாறு விவசாயத்தை வைத்து முறையற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி ஆட்சியில் இருந்து விலகினார்களோ அதேபோன்று கல்வியின் ஊடாக இந்த அரசாங்கம் அதே பாதையில் நோக்கி செல்வது மிகத்தெளிவாக தெரிகிறது என்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக கட்டமைப்பிலும் இனவாதமாக அரசாங்கம் சில விடயங்களை முன்னெடுப்பதாகவும் அது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடல் நடத்தியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (மற்றொரு செய்தி 19ஆம் பக்கத்தில்...)

# 36 மணித்தியாலங்களில் மழை பெய்யும் சாத்தியம்

நாட்டில் அடுத்துவரும் 36 மணித்தியாலங்களில், பல பகுதிகளில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதற்கமைய வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகும் என்று அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சபரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டமான நிலைமை காணப்படலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# இளவன்குளம் ஊடாக புத்தளத்திற்கு செல்லும் பிரதான வீதியை திறக்கக் கோரி அழுத்தம் கொடுக்க கையெழுத்துப் போராட்டம்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் இருந்து முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இளவன்குளம் ஊடாக புத்தளத்திற்கு செல்லும் பிரதான வீதியை திறக்கக் கோரி ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை முதல் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் இருந்து இளவன் குளம் ஊடாக புத்தளத்திற்கான பிரதான வீதியை திறப்பதற்கான ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து வேட்டை இடம் பெற்றது.

மன்னாரில் இருந்து இளவன்குளம் ஊடாக புத்தளத்திற்கு செல்கின்ற பிரதான வீதியை திறந்து மக்களின் பாவனைக்காக விடுவிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இந்தக் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மதத் தலைவர்கள் கலந்து கொண்டு கையெழுத்திட்டமையோடு, இந்த வீதியைத் திறக்கும் நிலையில் மன்னார் மாவட்ட மக்கள் மாத்திரம் இன்றி வடக்கு மக்களும் பலன் அடைவார்கள் எனத் தெரிவித்தனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இருந்து மீனவர்கள் மாத்திரம் இன்றி அனைவரும் தென் பகுதிக்கான போக்குவரத்தை இலகுவாக மேற்கொண்டு தமது வாழ்வாதார பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வை பெற்றுக் கொள்வார்கள் என அவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட மக்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் இந்தக் கையெழுத்துக்கள் மகஜராக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு அனுப்பி வைக்கப்படும் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள் மற்றும் மீனவ அமைப்புகள், பொது அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு கையெழுத்துக்களை இட்டு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது .

















# கிழக்கு மாகாண தைப்பொங்கல் விழா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த மாகாண தைப்பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுமுந்தன்வெளி கிராமத்தின் பொது விளையாட்டு மைதானத்தில் மிகவும் விமர்சையாக இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி மேனகா புவிக்குமார் தலைமையில் நடைபெற்ற இப்பொங்கல விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் போராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண செயலாளர் ரி.ஏ.சி. என்தலங்கம, மட்டக்களப்பு மாவட்ட அரவசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், அப் பகுதி கிராமங்களின் பொதுஅமைப்புக் களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், கலைஞர்கள், என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாரம்பரிய முறைப்படி விளைந்த வயலிலே நெல் அறுவடை செய்யப்பட்டு, அவை அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியிலே கலை, கலாசார அம்சங்களுடன் எடுத்துவரப்பட்டன. பின்னர் உப்பட்டி அடித்து, நெல் குற்றி, பல சுவைகள் நிரம்பிய பொங்கல் பொங்கி சூரியவழிபபாடு இடம்பெற்றது. மேலும் இதில் கலை நிகழ்வுகளும், இடம்பெற்றன.






















# இராசமாணிக்கம் ஜனன தின நிகழ்வுகளில் சுமந்திரன், சி.வீ.கே.சிவஞானம் பங்கேற்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு. இராச மாணிக்கம் அவர்களின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் களு வாஞ்சிகுடி சி.மு. இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி. கே.சிவஞானத்தின் தலைமையில் நடை பெறுகின்றது.

அமரர் பற்றிய நினைவுப் பேருரையை கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆற்று வார்.

"சி.மு.இராசமாணிக்கம் ஐயாவின் வாழ்வும் அவர் பதித்த தடங்களும்" என்ற தலைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாள ரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னரும், கிழக்கு மாகாண சபையின் முன் னாள் விவ சாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் சிறப்புரையாற்று வார்.

அமரர் சி.மு.இராசமாணிக்கம், இலங் கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவருமான இராசமாணிக்கம் சாணக்கியனின் பாட்டனார் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறுகிறது. அனை வரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்குமாறு ஏற்பாட் டாளர்கள் அழைத்துள்ளனர்.



# கல்வி மறுசீரமைப்பிலும் இனவாதம் தொடர்கிறது

## நாடாளுமன்றில் சாணக்கியன் குற்றச்சாட்டு

இன்று பாராளுமன்றத்தில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணையின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனவாதப் போக்கில் செயல்படுவதாகக் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த அரசாங்கங் களைப் போலவே இனவாத அரசாங்கமாகவே செயற் படுகிறது என்பதை பல தடவைகள் தாம் சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தெரிவித்த அவர், அதற்கான அண்மைய எடுத்துக்காட்டாக கிழக்குப் பல்கலைக்கழக பேரவை நியமனங்களைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் கிழக்கு பல்கலைக்கழக பேரவையில் எட்டு தமிழர்கள், ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் மற்றும் இரண்டு சிங்கள உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர் எனவும், ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் அந்த அமைப்பு ஐந்து தமிழர்கள், மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள் மற்றும் ஏழு சிங்கள உறுப்பினர்களாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் கல்வி அமைச்சரான பிரதமரைச் சந்தித்த போது இந்த விடயம் தொடர்பாக தாம் கவனம் செலுத்தினார் என்ச்வும், அதற்கு பதிலளித்த அமைச்சர் "இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் இலங்கைப் பல்கலைக்கழகங்களே" என தெரிவித்தார் என்ச்வும் சாணக்கியன் கூறினார்.

இதற்கு பதிலாக தாம் கல்வி அமைச்சருக்கு ஒரு சவாலை விடுத்தார் எனத் தெரிவித்த அவர், "ரஜரட்ட, களனி, றுஹுணு போன்ற பல்கலைக்கழகங்களின் பேரவைகளில் தமிழர்களைப் பெரும்பான்மையாக நியமித்து காட்டுங்கள். அதன் பின்னர் இலங்கையில் உள்ள எந்த பல்கலைக்கழகத்திலும் யாரும் இருக்கலாம் என்பதனை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம்" எனத் தாம் பதிலளித்தார் எனவும் கூறினார்.

மேலும் கல்வி மறுசீரமைப்பிலும் இந்த அரசாங்கம் இனவாதப் போக்கை வெளிப்படுத்தி வருவதாகக் குற்றம் சாட்டிய சாணக்கியன், வரலாற்றுப் பாடத்திட்டங்களில் தமிழர்களின் வரலாறு முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறு கல்வி மறுசீரமைப்பின் பெயரில் இனவாத நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால், கல்வி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானமான முடிவெடுக்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

## மதுராந்தகத்தில் தே.ஜ.கூ. பொதுக் கூட்டம்

# மோடி - பழனிசாமியுடன் கூட்டணி கட்சிகள் பங்கேற்பு



தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்ட மேடைக்கு பிரதமர் நரேந்திர மோடி, எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில், அ.தி.மு.க, பா.ஜ.கவுடன் அன்புமணியின் பா.ம.க. அணி, அ.ம.மு.க, த.மா.கா, புதிய நீதிக்கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் இணைந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலத்தை நிரூபிக்கும் விதமாக, செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் பிரம்மாண்ட பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றுவதற்காக பிரதமர் மோடி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. தலைவர் அன்புமணி, அ.ம.மு.க. தலைவர் டிடிவி. தினகரன், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான் பாண்டியன், புரட்சி பாரதம் கட்சித் தலைவர் ஜெகன் மூர்த்தி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள், பாஜக மூத்த தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் ஏராளமானோர் மதுராந்தகத்தில் திரண்டனர்.

பிரதமர் வருகையை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் 5 அடுக்கு பாதுகாப்புடன் பொலிஸார் முழுமை யான கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பாதுகாப்பு பணியில் 15,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர். ட்ரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டது.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு தனி விமானம் மூலம் சென்னை விமான நிலையம் வந்த பிரதமர் மோடி, பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு அவரை, எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் வரவேற்றனர்.

தமிழகம் வருவதை முன்னிட்டு பிரதமர் மோடி நேற்று வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“தமிழ்நாடு தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இருக்கிறது. மதுராந்தகத்தில் பிற்பகலில் நடைபெறும் பேரணியில் நான் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுடன் கலந்து கொள்ளவிருக்கிறேன். ஊழல் தி.மு.க. அரசுக்கு விடை கொடுக்கும் காலம் வந்துவிட்டது என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் சாதனையும் பிராந்திய பெருவிருப்பங்கள் மீதான அதன் அர்ப்பணிப்பும் மாநில மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.” என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உரியவர்களோடு ஒன்றிணைந்தால் வெற்றி உறுதி என்பதற்கான தருணம்

## தே.ஜ.கூ. பொதுக் கூட்டத்தில் பழனிசாமி தெரிவிப்பு

“உரிய காலத்தில், உரிய இடத்தில், உரியவர்களோடு ஒன்றிணைந்து, உறுதியாகச் செயல்பட்டால் வெற்றி என்பது நிச்சயம். அத்தகைய தருணம் இப்போது நமக்கு கிடைத்துள்ளது”

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் மதுராந்தகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்ற இந்த கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய எடப்பாடி பழனிசாமி,

“இன்று இந்தியாவே மதுராந்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரதமர் மோடி இந்த மண்ணில் கால் வைத்த உடனே, இயற்கையே சூரியனை மறைத்து விட்டது. மதுராந்தகமே குலுங்கும் அளவுக்கு மக்கள் வெள்ளமென கூடி இருக்கிறார்கள். நாம் பெறப்போகும் வெற்றிக்கு இதுவே சான்று.

உரிய காலத்தையும் இடத்தையும் தேர்ந்தெடுத்து செயல்பட்டால், உலகத்தையே கையில் அடக்கலாம் என திருவள்ளுவர் கூறிஇருக்கிறார். நம்மைஎதிர்ப்பவர்கள் எத்தகைய வஞ்சக நெஞ்சம் கொண்டவர்களாக இருந்தாலும், தீயவர்களாகவும் இருந்தாலும் உரிய காலத்தில், உரிய இடத்தில், உரியவர்களோடு ஒன்றிணைந்து, உறுதியாகச் செயல்பட்டால் வெற்றி என்பது நிச்சயம். அத்தகைய தருணம் இப்போது நமக்கு கிடைத்துள்ளது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்து நான்கே முக்கால் ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நான்கே முக்கால் ஆண்டுகளில் தி.மு.க. மக்களுக்கு கொடுத்தது வேதனை, துன்பம், எல்லா துறைகளிலும் ஊழல், ஊழல் இல்லாத துறைகளே கிடையாது. மக்களை வாட்டி வதைக்கும் அரசு தமிழ்நாட்டுக்குத் தேவையா? மக்களே நீங்களே சொல்லுங்கள். இந்த ஆட்சி தேவையா? இந்த மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

ஒரு குடும்பம் வாழ எட்டு கோடி மக்களைச் சுரண்டுவது நியாயமா? கருணாநிதி குடும்பம் ஆட்சியில் அமர்ந்து கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறது. கருணாநிதி முதல்வராக இருந்தார். அவருக்குப் பிறகு ஸ்டாலின் முதல்வராக இருக்கிறார். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து செய்த ஒரே சாதனை ஊழல், ஊழல், ஊழல். இன்று ஸ்டாலின் குடும்பம், உலகிலேயே பணக்கார குடும்பமாக இருந்து கொண்டிருக்கிறது. ஸ்டாலினுக்குப் பிறகு உதயநிதி ஸ்டாலின் வர வேண்டும் என்று எண்ணுகிறார்.

தி.மு.கவில் உழைத்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தற்போது வீதியில் இருக்கிறார்கள். ஆனால், கருணாநிதி குடும்பத்தில் பிறந்தவர்களுக்குத் தான் கட்சியிலும் அதிகாரத்திலும் இடம் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான், எந்த ஒரு தகுதியும் இல்லாத உதயநிதி ஸ்டாலினை முதலில் சட்டப்பேரவை உறுப்பினராக ஆக்கினார், பின்னர் அமைச்சராக்கினார், தற்போது துணை முதல்வர் ஆக்கி இருக்கிறார். அடுத்தது, எந்த பதவிக்கும் கருணாநிதி குடும்பம் வர முடியாது. இந்த தேர்தல் தான்திமுகவுக்குஇறுதித்தேர்தல்.தியசக்தி திமுகவை வீழ்த்துவோம். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா கண்ட கனவை நனவாக்குவோம்.

நமது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சக்தியால் பிரதமர் நமக்கு துணை நிற்கின்றார். நமது இயக்கம் வலிமையான இயக்கம், நமது கூட்டணி வெற்றிக் கூட்டணி, வலிமையான கூட்டணி. தேர்தல் என்ற போரில், எதிரிகளை ஓட ஓட விரட்டி வெற்றிக் கொடி நாட்டுவோம். அனைவரும் தேனிக்களைப் போல உழைப்போம்.

இந்த தேர்தலைப் பொறுத்தவரை குடும்ப ஆட்சிக்கு முடவுகட்டும் தேர்தல், வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டும் தேர்தல், ஊழல் ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல். நமது கூட்டணி 210 இடங்களில் வெற்றி பெறும். பெரும்பான்மை இடங்களில்வெல்லும். அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்.

தமிழகத்துக்கு எந்த திட்டமும் மத்திய அரசால் வழங்கப்படவில்லை என பொய்யான குற்றச்சாட்டை ஸ்டாலின் கூறி வருகிறார். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மத்திய அரசின் மூலம் பல்வேறு திட்டங்களை நாம் பெற்றோம். நாம் கேட்ட நிதியை கொடுத்தார்கள், நாம் கேட்ட திட்டத்தைக் கொடுத்தார்கள். ரயில்வே மேம்பாலங்கள் அதிக அளவில் கேட்டோம். அதை கொடுத்தது மத்திய அரசு. தேசிய நெடுஞ்சாலைகளை வழங்கினார்கள்.

எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்றிக் காட்டும் உறுதி படைத்தவர் பிரதமர் மோடி. இன்று உலகமே அவரை பாராட்டுகிறது.

உறவுக்கு கைகொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற அண்ணாவின் கொள்கையின்படியும், அமைதி, வளம், வளர்ச்சி என்ற ஜெயலலிதாவின் தாரக மந்திரத்தின்படியும் உறுதியுடன் நாங்கள் செயல்படுவோம். எங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய பிரதமர் மோடிக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்.” என தெரிவித்தார்.

# அமெரிக்காவை ஒரு நம்பகமான கூட்டாளியாக பார்க்க முடியாது

## ஐரோப்பியத் தலைவர்கள் தெரிவிப்பு



கிரீன்லாந்து தீவை வாங்குவது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்திருந்த மிரட்டல்கள் மற்றும் வர்த்தகப் போர் அச்சம் தற்போது தணிந்துள்ளது.

பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற அவசர உச்சிமாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இது குறித்துக் கலந்துரையாடியதுடன், அமெரிக்காவுடனான எதிர்கால உறவு குறித்து முக்கிய கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த டென்மார்க், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு 25 வீதம் வரை வரி விதிப்பதாக ட்ரம்ப் முன்னர் எச்சரித்திருந்தார்.

இருப்பினும், டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தில் ட்ரம்ப் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, கிரீன்லாந்து தொடர்பாக ஒரு இணக்கமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற அவசர உச்சிமாநாட்டின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயன் கூறுகையில்,

"நாங்கள் உறுதியாக நின்றதன் மூலமே இந்த வெற்றியைப் பெற்றுள்ளோம்.

அமெரிக்கா மீண்டும் மிரட்டல் விடுத்தால், அதற்குப் பதிலடி கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் தனது அனைத்து பொருளாதார ஆயுதங்களையும் பயன்படுத்தத் தயாராக உள்ளது." என அவர் எச்சரித்தார்.

அமெரிக்காவுடனான அத்திலாந்திக் கடல்கடந்த உறவு கடந்த ஒரு வாரத்தில் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் காஜா கலாஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவை ஒரு நம்பகமான கூட்டாளியாக இனி பார்க்க முடியாது என்றும் ஐரோப்பா தனது தற்காப்பு மற்றும் பொருளாதாரத் தேவைகளில் தன்னாட்சி அடைய வேண்டியது அவசியம் என்றும் தலைவர்கள் வலியுறுத்தினர்.

டொனால்ட் ட்ரம்பின் மிரட்டல்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐரோப்பிய ஒன்றிய – அமெரிக்க வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்குத் தலைவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ட்ரம்ப் எப்போது வேண்டுமானாலும் தனது முடிவை மாற்றக்கூடியவர் என்பதால், ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க முடிவு செய்துள்ளன.

குறிப்பாக, 93 பில்லியன் யூரோ மதிப்பிலான அமெரிக்க இறக்குமதிகள் மீது வரி விதிக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்த பசூக்கா தடைகளைத் தற்காலிகமாகவே ஐரோப்பா நிறுத்தி வைத்துள்ளது.

# ஆப்கானிஸ்தான் போரில் நேட்டோவின் பங்களிப்பை குறைத்து மதிப்பிட்ட ட்ரம்ப்

## உறுப்பு நாடுகளும் கடும் எதிர்ப்பு




ஆப்கானிஸ்தான் போரில் நேட்டோ நாடுகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் தவறானவை எனப் பிரித்தானிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப், நேட்டோ நாடுகள் அமெரிக்காவின் உதவியை எப்போதும் எதிர்பார்ப்பதாகவும், ஆனால் அமெரிக்காவுக்குத் தேவைப்படும்போது அவை உதவுவதில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

குறிப்பாக, ஆப்கானிஸ்தான் போரின் போது நேட்டோ படையினர் முன்னணி வரிசையில் நின்று போரிடாமல், ஒதுங்கியே இருந்ததாக அவர் குறிப்பிட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இக்கருத்து குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் ஜோன் ஹீலி, "அமெரிக்காவுக்காகவும் சர்வதேச பாதுகாப்பிற்காகவும் 457 பிரித்தானிய வீரர்கள் ஆப்கானிஸ்தானில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது" எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ட்ரம்ப்பின் கருத்துக்கு ஏனைய நேட்டோ உறுப்பு நாடுகளும் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன 150 க்கும் மேற்பட்ட வீரர்களை இழந்த கனடா, ட்ரம்ப்பின் பேச்சு "ஏற்றுக்கொள்ள முடியாதது" எனத் தெரிவித்துள்ளது.

மேலும், மக்கள் தொகை விகிதாசாரப்படி அதிக உயிரிழப்புகளைச் சந்தித்த டென்மார்க், இது "உண்மையை மறைக்கும் செயல்" எனச் சாடியுள்ளது.

அத்துடன், செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்காவிற்கு ஆதரவாகக் களமிறங்கிய நேட்டோ உறுப்பு நாடுகள், ஒட்டுமொத்தமாக 1,100-க்கும் மேற்பட்ட வீரர்களை இப்பாரிய போரில் இழந்துள்ளமையை அவை சுட்டிக்காட்டியுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள்- 24.01.2026




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல் திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல் பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கை யுடன் இவைகளை சமாளிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற் றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று கடினமான சூழ்நிலை களை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதற்றத்துக்கு ஆளா வீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்கு களில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுது போக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 24.01.2026




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக கானபட்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்ட மிடுதல் மற்றும் யுக்திகளை கையாள் வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதற்றத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.என்றாலும் அதிக வேலை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியா ளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

இன்று சேமிப்பதற்கும் இயலாத நிலை இருக்கும்.

சளி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படலாம்.




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிக ளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப் படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# புதிய சிறைச்சாலையை நிர்மாணிக்க நடவடிக்கை

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை குறைத்துக் கொள்வதற்கு வெலிசறை பகுதியில் புதிய சிறைச் சாலையை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சு தெரிவிக்கின்றது.

சிறைச்சாலை குறித்து வர்த்தமா னியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் புதிய கட்டடங் களை நிர்மாணித்து கைதிகளை விரை வில் அங்கு அனுப்புவதற்கு தேவை யான நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

அரச நிறுவனங்கள் சிலவற்றின் கட்டங்களை தெரிவு செய்து அவற்றை தற்காலிக சிறைச்சாலைகளாக பயன் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக நீதியமைச்சு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.




சிறைச்சாலைகளில் 11,000 கைதி களை தடுத்து வைத்திருப்பதற்கான இயலுமை மாத்திரமே காணப்படுகின்ற போதிலும் தற்போது 39,000 இற்கும் மேற்பட்ட கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.